விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 282 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 10 புதன்கிழமை (27.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கொட்டும் மழைக்கு மத்தியில்
# தியாகி திலீபனுக்கு நல்லூரில் அஞ்சலி






## திரண்ட தமிழ் உணர்வாளர்கள்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் வாழ்வுக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்த தியாகி திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று நல்லூரில் கொட்டும் மழைக்கும் மத்தியில் இடம் பெற்றது. (15ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் திலீபன் நினைவேந்தலை குழப்ப பொலிஸார் முயற்சி?

(யாழ்ப்பாணம்)

யாழ் நல்லூரில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தியாக தீபம் திலீபனின்36ஆம்ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதனை குழப்பும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் மக்கள் அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தவேளை வீதியில் போக்குவரத்தினைச் சரி செய்தவர்களைப் பொலிஸார் அச்சுறுத்தியதாகவும், மக்கள் நெரிசல் காணப்பட்ட இடத்தில் வேகமாக வாகனத்தை செலுத்தி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ▷15

### உணர்வுபூர்வமாக
## முல்லையிலும் அஞ்சலி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தியாக திலீபனின் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் ▷15

### யாழ்.பல்கலைக்கழகத்தில்
## திலீபனுக்கு அஞ்சலி



▷15

## திருமலையில் திலீபனை நினைவேந்தத் தடை

(திருகோணமலை)

தியாக தீபம் திலீபனின் நினைவஞ்சலியானது நேற்று திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெறவிருந்த நிலையில் நீதிமன்றம் ஊடாக திருகோணமலை துறைமுக பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டது.

குறித்த தடையினை நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் ஆறு நபர்களின் பெயர்களின் விபரங்கள் அடங்கிய தடை உத்தரவு ▷15

### வேலணை வங்களாவடியில்
## திலீபனின் நினைவேந்தல்



▷15

## ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் கொலை
### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு கிளிநொச்சி கோணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த புஸ்பராசா தினேஸ் (வயது-28) ▷15

## புலிகளின் தங்கம் தேடி
### 2ஆவது நாளாக அகழ்வு

(முல்லைத்தீவு)

விடுதலைப் புலிகளின் தங்கம் மற்றும் ஆயுதங்களைத் தேடி நேற்று 2ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் ▷15

## அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துக
### இலங்கையிடம் பிரித்தானியா வலியுறுத்து

(கொழும்பு)

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் என்பவற்றின் அவசியம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலமைப்பரிசில் பரீட்சை 2023

அநேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க

**வெற்றித்தேர்வு வெளியீட்டகம்**

நடாத்தும் பரீட்சைக்குத் தோற்றவுள்ள

தரம் - 5 மாணவர்களுக்கான

வெற்றித்தேர்வின் பிரதம ஆசிரியருடன்

அனைத்து வளவாளர்களும்

கலந்து கொள்ளும்

**மாபெரும் செயலமர்வு**

இரண்டு பிரிவுகளாக

காலம் - 28.09.2023 (வியாழக்கிழமை)

பிரிவு - 1 → காலை 9.00 முதல் 1.30 மணி வரை

பிரிவு - 2 → பி.ப 2.00 முதல் 6.30 மணி வரை

இடம் : வெற்றித்தேர்வு பரீட்சை நிலையம்

நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகம்

(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக)

அன்றைய தினம் நுழைவாயிலில் கட்டணத்தைச் செலுத்தி அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டணம் ரூபா 500.00

(C-7333)

தொடர்புகளுக்கு

0775388471, 0773126807, 0779543956


# பங்களாதேஷிடம் இருந்து 54 அத்தியாவசிய மருந்துகள்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பங்களாதேஷ் பிரதமரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய 54 வகையான அத்தியாவசிய மருந்து பொருட்களை இலங்கைக்கு வழங்குவதற்கு பங்களாதேஷ் தீர்மானித்துள்ளது.

இதன்படி, பங்களாதேஷ் சுகாதார அமைச்சின் தலையீட்டுடன் வழங்கப்படும் இந்த மருந்து பொருட்கள் 58.307 அமெரிக்க டொலர் பெறுமதியானவை என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மருந்துகள் அடுத்த வார மளவில் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த மருந்து தொகையில் புற்று நோய் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளும் அடங்குவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)


## பணிப்பெண் தேவை

யாழ்.நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

(17249)

077 327 6502



# கொழும்பு விலையில்

யாழ்ப்பாணத்தில் மலிவாக கோழிகள் பெற்றுக் கொள்ளலாம்

- 24 மணி நேர சேவை (இரவு-பகல்)
- 33 வருட கால முட்டை கோழிகள் விற்பனையில் நிலை மாறா பண்ணையாளர்
- புறோயிலர்,பேரன்ஸ்,கல்பேட்ஸ்,ஊர்க்கோழி, சேவல்,விறாத்துக் குஞ்சுகள்,முட்டை
- இவை அனைத்தும் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளலாம்
- புறோயிலர் சில்லறை விலை 1100/- மொத்த விலை 1000/- (சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி)
- இவை தவிர சுத்தம் செய்யப்படாமல் புறோயிலர் 1 kg 720/-
- வியாபாரிகள்,கொட்டல் தேவைகளுக்கு சிறந்த கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்



(17248)

தொடர்பு

நியு சிற்றி பாம்

நியு சிற்றி கோழிக்கடை

இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர், யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்



## திருமதி தங்கராசா இராசலட்சுமி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இராசவீதி கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா இராசலட்சுமி அவர்கள் 26.09.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் தம்பையா தங்கராசா(ஓய்வு பெற்ற மலேரியாத் தடை வெளிக்கள உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - முத்தம்மா தம்பதிகளின் அருமை மருமகளும், அனுசுஜா(கனடா), உஷா(கனடா), சுதாகரன் (முகாமையாளர், இலங்கை வங்கி வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராஜா(கனடா), ஜசிந்தன்(கனடா), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், சிவரத்தினம், திருப்பதி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கார்த்திகேசு, மகேஸ்வரி மற்றும் சம்பந்தன்(கனடா) ஆகியோரின் மைத்துனியும் சாயீசன், அஸ்வின், ஜஸ்வினி, பிரணவிகா(யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சாத்விகா(யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27.09.2023 புதன்கிழமை 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

'இராஜ கிரி'
இராஜ வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
077 990 6813
076 947 0910

(17251)


வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

sky Yoga



முழுமை நல வாழ்விற்கான மனவளக்கலை யோகா

Sky Yoga

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

Sep - 28 முதல் ஒக்டோபர் 1 ஆம் திகதி வரை

நேரம் : காலை 9 - 12 மணிவரை

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு

இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில்

- இலங்கை பேராசிரியர்களால் நடாத்தப்படும் ஆரம்ப நிலை Sky Yoga பயிற்சிகள்
- நோயின்றி வாழ + எளியமுறை உடற்பயிற்சி
- மனநலம் பெருக - தவமும் தற்சோதனையும்
- உயிர் வளம்பெருக்க - காயகல்பப் பயிற்சிகள்



(17252)

இடம்:
யாழ் தவமையம்
வேதாத்திரி ஆன்மீக கல்வி நிலையம்
14/4, கோயில் வீதி, 1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :
076 395 9293
077 088 2939
077 419 7138


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வரட்ணம் கமலேஸ்வரி (மலர்)

## (ஓய்வுநிலை குடும்பநல உத்தியோகத்தர்)



தோற்றம் : 11.08.1952 மறைவு : 26.09.2023

கரணவாய் கிழக்கு மணற்பாதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் கமலேஸ்வரி (மலர்)(ஓய்வுநிலை குடும்ப நல உத்தியோகத்தர்) 26.09.2023 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் செல்வரட்ணம் (ஓய்வு நிலை பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும் ரிஷிகேஷன் அவர்களின் பாசமிகு தாயாரும் அமரர்களான இராஜேஸ்வரி, சற்குணம், இராச குலேந்திரம் மற்றும் புவனேந்திரம்(சுவிஸ்), மங்களேஸ்வரி (ஓய்வுநிலை - ஆசிரிய ஆலோசகர்) இரத்தினேஸ்வரி(சுவிஸ்), விக்கினேஸ்வரன்(சுவிஸ்) காலஞ்சென்ற சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஈஸ்வரசோதி, சறோஜா, அரியரட்ணம், விஜிதா, சுபிதா விஜயரட்ணம்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2023) புதன்கிழமை மதியம் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
சோ.செல்வரட்ணம் கணவர்
(ஓய்வு நிலை பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்
யாழ். போதனா வைத்தியசாலை

077 959 6562

(17253)

# இதய அஞ்சலி



உள்ளத்தால் உழைப்பால், உன்னத
தொண்டால், உயர்ந்த உத்தமர்

தெல்லிப்பழை தேசகீர்த்தி தொழிலதிபர்
லயன். உயர்திரு.
**ச. ஆறுமுகநாதன்**
(உப தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம்)

தவப்பேறு 30.10.1939 சிவப்பேறு 26.09.2023

எங்கள் தேவஸ்தான
வளர்ச்சியில் கடந்த அறுபது
ஆண்டுகளுக்கு மேல்
அர்ப்பணிப்போடு தொண்டாற்றிய
பெருமகனை நாம்
இழந்து தவிக்கின்றோம்.

ஈரநெஞ்சுடைய, இரக்கம் நிறைந்த மானிடம்
ஏழை பங்காளன் எவர்க்கும் உதவும் வள்ளல்,
ஆலய அன்னதானப்பணி, திருப்பணி மகளிர் இல்லப் பிள்ளைகளின்
வாழ்வியற்பணி, நல்லூர் துர்க்கா மணி மண்டபப்பணி
அனைத்திலும் உங்கள் உன்னத பங்களிப்பை
நீள நினைந்து வணங்குகிறோம்.
அம்பாள் திருவடியில் அணையா விளக்காய்
நிலைத்திட வேண்டுகின்றோம்.


துர்க்காபுரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

(C-7336)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127


# மரண அறிவித்தல்



தோற்றம் 1939.10.30 மறைவு 26.09.2023

தேசகீர்த்தி லயன். திரு.

## சரவணமுத்து ஆறுமுகநாதன்

[தொழிலதிபர்,
உபதலைவர் - தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்]

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தேசகீர்த்தி லயன். திரு. சரவணமுத்து ஆறுமுகநாதன் அவர்கள் நேற்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய புத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆசைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜனார்த்தனன் (Jana Civil Engineering Construction) அவர்களின் அன்புத் தந்தையும் கஜனி (Pharmacist) அவர்களின் அன்பு மாமனாரும் விபூஷனன், கேதுசன் (யா/இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அன்னபூரணம் மற்றும் இராசம்மா (புன்னாலைக்கட்டுவன்), சிவசுப்பிரமணியம்(பன்னாலை), பரஞ்சோதி (தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மல்லாகத்தைச் சேர்ந்த தம்பித்துரை, மகேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் காலஞ்சென்ற இராசம்மா, மகேஸ்வரி மற்றும் திருஞானசம்பந்தமூர்த்தி(வட்டுக்கோட்டை), சிவசோதிலிங்கம்(கொல்லங்கலட்டி) மற்றும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், நாகரத்தினம், தம்பிராசா, உமாபதிதேவி, மற்றும் தவநாதன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாலசிங்கம் மற்றும் பத்மலீலா மற்றும் காலஞ்சென்ற இந்திராதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் சிவபாலன், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் ஸ்கந்தராசா, அருந்ததிதேவி, திருவருட்செல்வி, சத்தியசீலன், குணரட்ணம், அரசரத்தினம், கலாதேவி, புனிதவதி, தயனொளிபவன், சிவனொளிபவன், சகுந்தலாதேவி, சுமதி, அனந்தீசன், கிருஷ்ணதாஸ், உஷாநந்தினி, பத்மஜெயன் காலஞ்சென்ற சொரூபன் மற்றும் சிவரூபன் (சிவா), பரமரூபன், மயூரன், இராகுலன் ஆகியோரின் மாமனாரும் சயந்தன், முகுந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2023) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible],
தெல்லிப்பழை.


(17254)

தகவல்: மகன் ஆ.ஜனார்த்தனன்
077 377 3535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து உறவுகளும் இயற்கையும் இணைந்து தியாகச் செம்மலுக்கு விழிநீர் சொரிந்தன












திலீபனின் நினைவிடம் நோக்கி வந்த தூக்குக் காவடிகள்



(படங்கள்- சிவசாந்தன், கஜிந்தன், ஜோசப்நயன்)

மன்னாரில்...





கிளிநொச்சியில்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீன ஆய்வுக் கப்பலுக்கு இதுவரை அனுமதியில்லை

## வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

சீன ஆய்வுக் கப்பலான ஷியான்-6 ஐ எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங் கையில் நங்கூரமிட இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# மொனராகலையில் நிலஅதிர்வு

(கொழும்பு)

மொனராகலை - புத்தல பகுதியில் நிலஅதிர்வு ஒன்று பதிவாகியுள்ளதாக புவி சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 2.4 மெக்னிடியுட் அளவில் குறித்த நிலஅதிர்வு பதிவாகியுள்ளது.

இதற்கமைய மொனராகலை மற்றும் படால்கும்பர ஆகிய பகுதிகளிலும் அதிர்வின் தாக்கம் உணரப்பட்டுள்ளதாகவும் புவி சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)


## JAFFNA EDUCATION EXAM CENTRE

**தரம் 05 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு- 2023**

இறுதிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்

விசேட பரீட்சையும் இலகுவாக அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கான நுட்பங்களும்

யாழ்ப்பாணத்தின் முன்னணி வளவாளர்களினால் வழிகாட்டப்படும்.

செயலமர்வில் வழங்கப்படும் முதலாவது வினாப்பத்திரத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு

**பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பணப் பரிசுகளும் வழங்கப்படும்.**

**இடம் - தந்தை செல்வா கலையரங்கு (யாழ்.மத்திய கல்லூரி)**

**காலம் - 28.09.2023 (வியாழக்கிழமை)**


**நேரம் - மு.ப. 8.30 முதல் பி.ப 1.00 வரை**

இடவசதியைக் கருத்திற்கொண்டு முற்பதிவு செய்பவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

பதிவுகளை மேற்கொள்ள கீழே உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். (இ)

**074 181 9705/ 076 475 4163/ 075 447 5302**


# கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சியின் மூத்த பிரஜையும் சமூக சேவையாளரும் மகாதேவ ஆச்சிரமத்தின் ஆரம்பகால உறுப்பினருமாகிய

அமரர்

## திரு. கா.நாகலிங்கம்

அவர்களின் மறைவுச் செய்தி எம்மை ஆழாத் துயரில் மூழ்க வைத்தது.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதுடன் பிரிவுத் துயரால் வேதனையடையும் குடும்பத்தாருக்கு மன அமைதியை கொடுக்க வேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கிறோம்.

அறங்காவலர் சபையும் நிர்வாகசபையும்
மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி. (சி-7332)

# இராசிபலன்

27.09.2023
புரட்டாதி 10, புதன்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.07 மணிவரை
அவிட்டம் காலை 6.05மணிவரை

சதயம் பின்னிரவு 4.27 மணிவரை
சுபநேரம் -4.32-6.02 மணிவரை
இராகுகாலம்-12 .02-1.32மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்- பூசம்

வளவன்

**மேஷம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**துலாம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிம்மம்** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**கன்னி** செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**மீனம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

மரணம் வரும் [illegible] வரை நம்புவது என்று தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்தில் பயணித்த பெண்ணிடம் கைவரிசை காட்டிய நால்வர் கைது

(குருமன்காடு)

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பேருந்தில் 20 பவுண் நகைகளை திருடியதாக இரு பெண்கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பேருந்தில் முருங்கன் பகுதியில் இருந்து ஆசிரியரான பெண் ஒருவரும் பயணித்துள்ளார். குறித்த பெண் பேருந்தில் இருந்து இறங்கியுள்ளார்.

இதன்போது பெண்ணின் கைப்பை திறக்கப்பட்டு அதற்குள் இருந்த அவரது சங்கிலி, மோதிரம் உட்பட 20 பவுண் நகைகள் காணாமல் போனமையை அவதானித்ததை யடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் குறித்த ஆசிரியர் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் மகாறம்பைக்குளத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்த புத்தளம், 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இரு பெண்களும், இரு ஆண்களும் கைது செய்யப்பட்டதுடன், திருடப் பட்டதாக கூறப் பட்ட 20 பவுண் நகை, முச்சக்கர வண்டி மற்றும் பட்டாரக வாகனம் ஒன்றும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையின் பின் குறித்த நான்கு பேரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5-6-250)

# முதியோர் சங்க ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 12 ஆவது ஆண்டுவிழாவும் சிறப்பு கலை நிகழ்வுகளும் நாளை வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6)

# திலீபனின் உருவத்தை பச்சை குத்திய இளைஞன்



(யாழ்ப்பாணம்)

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இளைஞன் ஒருவர் தனது கையில், திலீபனின் உருவப் படத்தை கையில் பச்சை குத்தி இருந்தது பலரின் கவனத்தை ஈர்த்து இருந்தது. குறித்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுவருகின்றது. (நி-6-33)

# பாரம்பரிய உணவுத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும் பாரம்பரிய உணவுத் திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4 மணிக்கு நிலைய மைதானத்தில் நிலைய தலைவர் இரா.மதிகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுகந்தராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

## திலீபனின் நினைவேந்தலுக்காக

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை புறக்கணித்த தமிழ் எம்.பிக்கள்

(கருமபுரம்)

கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட அபி விருத்திக்குழுக் கூட்டத்தினை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்தனர்.

நேற்று தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் பல பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சியில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆகியோர் குறித்த கூட்டத்திற்கு சமூகம் அளிக்காது புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)





இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற் தலைமையிலான குழு ஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூகநிலைய வளர்ச்சிக் காக நடத்தும் கவின்கலை கண்காட்சி இன்று ஆரம்பமாக வுள்ளது.

இக்கண்காட்சி நாளை மற்றும் நாளை மறு தினமும் இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு நிலைய பிரதான மண்டபத்தில் இ.க.ம தலைவர் கு.நிருக்ஷன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதீக வியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. தி.பத்மதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

# குளவிக்கூட்டினை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டப மேற் சுவரில் பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய பாரிய குளவிக் கூடு ஒன்று இருப்பதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் கொண்ட மேற்படி மண்டபத்தில் உள்ள குளவிக்கூட்டினை அகற்றாத பட்சத்தில் பொன்விழா மண்டபத்திற்கு வருகை தருவோர், நீதிமன்றத்திற்கு வருகை தருவோர் எனப் பெரும்பாலானவர்கள் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும் எனவும், எனவே நகரசபை விரைந்து குளவிக் கூட்டினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக சாவகச்சேரி சோலை அம்மன் ஆலயப் பகுதி மற்றும் கரம்பகம் பகுதிகளில் குளவிக் கூடு கலைந்ததில் பெருமளவானவர்கள் குளவிக் கொட்டிற்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 500 |
| தக்காளி | 200 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 180 | 180 |
| கோவா | 160 | 120 | 150 | 150 |
| கரட் | 350 | 250 | 250 | 240 |
| பூசணி | 60 | 80 | 80 | 60 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 160 | 180 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 100 | 160 | 150 |
| லீக்ஸ் | 160 | 130 | 150 | 150 |
| பீற்றூட் | 140 | 120 | 180 | 160 |
| கறிமிளகாய் | 300 | 350 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 150 | 100 |
| போஞ்சி | 400 | 450 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | 150 |
| கீரை – 1 பிடி | 80 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 300 | -- | 400 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 170 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 60 | 150 |

# அனுமதி பெற்று மணல் ஏற்றலாம்

## ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

(முறிகண்டி)

மணல் நெருக்கடியை அபிவிருத்திக்குழு தளர்த்தியுள்ளது. அதனடிப்படையில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அனுமதிப்பத்திரத்துடன் மணல் ஏற்றி பயணிக்க தீமானிக்கப்பட்டுள்ளது.

முறையான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டு, அனுமதிக்கப்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு அமை வாக மணல் ஏற்றி பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினரின் கண்காணிப்பு தொடர்ந்தும் இருக்கும் எனவும் சட்டவிரோத மண்ணகழ்விற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நேற்று மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

மேலும் மணல் அனுமதி எதிர்வரும் திங்கட்கிழமைக்கு பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளது. கடந்த 10 நாட்களிற்கு முன்னர் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-100-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம:

## அருள்மிகு காளிஅம்பாள் தேவஸ்தானம் கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

### கேதார கௌரி விரதம்

**விரதாரம்பம் : 24.10.2023 செவ்வாய்க்கிழமை**
**விரத பூர்த்தி 13.11.2023 திங்கட்கிழமை**

கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் தங்கள் பெயர், நட்சத்திரங்களை 29.09.2023 வெள்ளிக்கிழமை முதல் பதிவு செய்து கொள்ளலாமென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கோவில் திறந்திருக்கும் நேரம்**

காலை: 6.00 மணி முதல் 9.00 மணிவரை
மதியம்: 11.30 மணி முதல் 12.30 மணிவரை
மாலை: 4.00 மணி முதல் 6.00 மணிவரை

**வெள்ளி, செவ்வாய்**

காலை: 6.00மணி முதல் 12.30 மணிவரை

(17232) **தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்.**

## ENGLISH CLASSES

(For Group of Minimum Five Members)

- English Language.................. Gr9,Gr10,Gr11,GCE A/L
- English Literature.......................Gr10,Gr11,GCE A/L
- English Language Literature Classes.......... For Degree Classes
- IELTS...................Preparation Classes
- TOFEL.................. Preparation Classes
- Spoken English............
- Business Communication...........Public & Private Sector Employees (English for Employees of Public and Private Sector)


**Starts on 03.10.2023**

***Note: School Students Should come with parents for enrolment***

பாடசாலை மாணவர்கள் பதிவிற்கு பெற்றோருடன் வந்கை தரல் வேண்டும்

***Teacher : Mr.K.Subramaniam***

158, POTHPATHY ROAD, KONDAVIL.
TP -077 351 8308, 071 812 5937. (17222)



## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

### 28.09.2023

உமையவள்தன் பாலகனார் தேரிலேறி
உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்
பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி
சிக்கலெல்லம் சீக்கிரமாய் தீரச் செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளுவாய்
கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக கணபதியே

**சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில் நாளை**

**28.09.2023 வியாழக்கிழமை எல்லாம் வல்ல**

## கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா

**வெகுசிறப்பாக இடம்பெறவுள்ளது.**

நாளை காலை 8.00 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம்பெருமான் சித்திரத் தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்சவத்தில் ஈழத்துப் புகழ்பூத்த பல தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்து கொண்டு எம்பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள். கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்திலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருட்கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

(17229) **தேர்த்திருவிழா உபயகாரர்கள்.**

## பெயர் மாற்ற அறிவித்தல்

168/கலீபா அப்துல் காதர் வீதியில் வசிக்கும் பஸ்மிலா சுல்தான் மரைக்கார் எனும் பெயரை இன்று முதல் பாத்திமா பஸ்மிலா சுல்தான் மரைக்கார் என பெயர் மாற்றம் செய்கிறேன்.எனவே இனி வரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**உண்மையுள்ள**
(17238) **பாத்திமா பஸ்மிலா சுல்தான் மரைக்கார்.**

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **30.06.2022** வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் **13.10.2023** (வெள்ளிக்கிழமை), **14.10.2023** (சனிக்கிழமை) திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ் பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு,சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல் கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

| | |
|---|---|
| நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி | : 12.10.2023 |
| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | : யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| திகதி | : 13.10.2023 (வெள்ளிக்கிழமை) |
| | 14.10.2023 (சனிக்கிழமை) |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது. (சி-7330)

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமையகம்.**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல: 021 222 2601**
**தொலைநகல்: 021 222 2602**
**மின்னஞ்சல்: jafrho@peoplesbank.lk**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் 40, நொச்சிக்காட்டு வீதி, வட்டாரம் -09

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -09 , நொச்சிக்காட்டு வீதியிலுள்ள இல 40 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **"சின்னப்பு வேலுப்பிள்ளை"** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **வேலுப்பிள்ளை கணபதிப் பிள்ளை கைம்பெண் செல்வரத்தினம்** ஆகியவர் சிவசுப் பிரமணியம் புவனேசன் என அழைக்கப்படும் புவனேஸ்வரன் என்பவருக்கு அவரது பேர்த்தியாரான தங்கமுத்துவால் ஈகை செய்யப்பட்டு குறித்த புவனேஸ்வரன் சிங்கப்பூரில் வசித்து வந்திருந்தார் என்றும் அவர் இவ்வாதனத்தை தனது கணவர் (சின்னப்பு வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை) நன்கொடையாக கொடுக்க சம்மதித்து ஆட்சி செய்ய விட்டிருந்தார் என்றும் இன்றுவரை தானும் தனது பிள்ளைகளும் எவ்வித தடையு மில்லாது குறித்த ஆதனத்தினை ஆட்சி செய்தும் பராமரித்தும் வருவதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் 16388/22.09.1999 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன்** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் சொரியலாக 4/5 பங்கினை பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6333/18.02. 2001 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கணபதிப்பிள்ளை கைம்பெண் செல்வரத்தி னமும் நடராசா மாதவராசா கைம்பெண் மங்கள வல்லியும், கணபதிப்பிள்ளை மகள் சாரதாவல்லியும், கணபதிப்பிள்ளை மகள் நித்தியானந்தவல்லியும்** ஆகிய வர்களிடமிருந்து நன்கொடை யாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

**கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன்** ஆகியவர் குறித்த முழு ஆதனத் தில் சொரியலாக 1/5 பங்கினை பிரசித்த நொத்தாரிசு செல்வி.பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1630/11.04.2023 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கணபதிப் பிள்ளை யோகேஸ்வரன்** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

குறித்த **கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர் கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்க ளுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது **கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன்** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு, பிரதேசசபை.** (17237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 208

## நிம்மதியான வாழ்க்கை வாழ்வது எப்படி



குரு ஒருவர் மரணப் படுக்கையில் இருந்தார். "இன்று மாலைக்குள் இறந்துவிடுவேன்" என்று தன் சீடர்களிடம் தெரிவித்துவிட்டார். இதைக் கேள்விப்பட்ட அவர் நண்பர்கள் பலரும், சிஷ்யர்களும் ஆசிரமத்தை வந்தடைந்தனர்.

மூத்த சீடர் ஒருவர் திடீரென கடைவீதிக்குப் புறப்பட்டார். "ஏய்... என்ன மடத்தனம் பண்ணுகிறாய்.. குரு மரணப்படுக்கையில் கிடக்கும்போது அப்படி என்ன அவசரமாக வாங்க வேண்டியிருக்கு?" என்றனர் மற்றவர்கள்.

மூத்த சீடர். "குருநாதருக்கு நாவல்பழம் என்றால் அத்தனை பிரியம். அதை வாங்கத்தான் போகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

எல்லோரும் கவலையோடிருந்தனர். குரு கண்களைத் திறப்பதும் யாரையோ தேடுவதும் பின் மூடிக் கொள்வதுமாக இருந்தார்.

மூத்த சீடர் வந்ததும், "வந்து விட்டாயா...

எங்கே நாவல்பழம்?" என்றார். அவர் கையில் நாவல் பழத்தைக் கொடுத்ததும், சற்றும் நடுக்கமின்றி அதை வாங்கிக் கொண்டார்.

ஒரு சீடர் குருவிடம், "குருவே.. தள்ளாத வயதிலும் உங்கள் கைகளில் நடுக்கமில்லையே?" என்றார். குரு சிரித்தபடி, "என் கைகள் ஒருபோதும் நடுங்கியதில்லை. ஏனென்றால் எப்போதும் எதற்கும் நான் பயந்ததே இல்லை" என்று சொல்லிவிட்டு நாவல் பழத்தை ருசித்து தின்னத் தொடங்கிவிட்டார்.

இன்னொரு சீடர் குருவிடம் பணிந்து, "ஐயா, தாங்கள் சீக்கிரமே இந்த உலகை விட்டுப் பிரியப் போகிறீர்கள். நாங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய தங்களின் இறுதிக் கருத்து என்ன?" என்று கேட்டார்.

குரு சிரித்தபடி, "இந்த நாவல்பழம் என்ன அருமையான சுவையுள்ளதாக இருக்கிறது" என்று சொல்லிவிட்டு இறுதி மூச்சை விட்டார்.

அந்தந்தக் கணத்தில் வாழுங்கள். கடந்து போன நிமிடமும், வரப் போகும் நிமிடமும் நமக்கானதல்ல. இன்று இப்போது மட்டுமே நிஜம்.

## இம்ரான்கானை வேறு சிறைக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் - பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அட்டாக் சிறைச்சாலையில் இருந்து இம்ரான்கானை வேறு சிறைக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது ஊழல் குற்றச்சாட்டு உட்பட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதில் தோஷகானா ஊழல் வழக்கில் கடந்த மாதம் 5ஆம் திகதி அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அட்டாக் சிறையில் அவர் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

இதனையடுத்து அவரது உடல்நலம், சமூக மற்றும் அரசியல் நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஏ-வகுப்பு வசதிகள் கொண்ட சிறைக்கு மாற்றும்படி இம்ரான்கான் தரப்பில் வழக்கு தொடுக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணை இஸ்லாமாபாத் உச்ச நீதிமன்றத்தில் நடை பெற்று வந்தது. இந்த நிலையில் அவரை ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி-5)

# கொரோனாவை விட அ

# உலக அழிவுக்கான

## நுண்ணுயிரியல் விஞ்ஞானி எச்சரி

(பீஜிங்)

**எதிர்காலத்தில், கொரோனாவை விட மிகக்கொடிய வை தாக்கும் அபாயம் இருப்பதாக நுண்ணுயிரியல் விஞ்ஞானி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவக்கக்கூடிய வைரஸ்கள் தொடர்பான ஆய்வின் மூலமாக புகழ்பெற்ற விஞ்ஞானிதான் ஷி ஸெங்லி.

உலகம் முழுவதும் உள்ள அனைவருமே, கொரோனாவை விட அதிக அபாயம் நிறைந்த வைரஸை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று எச்சரித்துள்ளார்.

வூஹானில் உள்ள நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்தில், தொற்று நோய்கள் மையத்தின் இயக்குநரான இவரது குழுவினர் இந்த ஆய்வு தொடர்பான ஆய்வுக்கட்டுரை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

குறித்த ஆய்வுக்கட்டுரையில் 40 வகையான கொரோனா வைரஸ்கள் மனித குலத்தை தாக்கவுள்ளதாகவும், அதில் அரைவாசிக்கும் அதிகமானவை மிகவும் அபாயமானவை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு போன்ற பயங்கரமான நிகழ்வுகள் உலகை உலுக்கக்கூடிய சாத்தியம் உள்ளதாக இந்த ஆய்வுக் கட்டுரையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பாரிஸில் எழுச்சியுடன் நடைபெ

# திலீபனின் நினைவேந்த

(பாரிஸ்)

பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் 10ஆம் வட்டாரத்தில் தமிழர்களின் வர்த்தக மையமான "குட்டி யாழ்ப்பாணம்" என அழைக்கப்படும் லாச்சப்பல் பகுதியில், செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் செப்டம்பர் 26 ஆம் திகதி வரை பாரிஸ் 10 ஆம் வட்டார காவல் துறை மற்றும் நகர சபையின்அனுமதியுடன் பொதுமக்கள் வணக்கம் செலுத்துவதற்காக தியாக



## ஆயிரக்கணக்கானோரை பலிகொண்ட பெருவெள்ளம்

# லிபியாவில் எட்டு அதிகாரிகள் கைது

(திரிபோலி)

லிபியாவில் பெருவெள்ளத்தால் ஆயிரக்கணக்கானோர் பலியான நிலையில், தற்போது நகர மேயர் உட்பட 8 அதிகாரிகளையும் கைது செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் டெர்னா நகரை வெள்ளத்தில் மூழ்கடித்த அணைகள் இடிந்து விழுந்ததில் தவறான நிர்வாகம் மற்றும் அலட்சியம் குறித்த சந்தேகம் தொடர்பில் இந்த கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

லிபியாவின் அட்டர்னி ஜெனரல் அலுவலகம் வெளியிட்டுள்ள தகவலில், புயலுக்கு பின்னர் டெர்னா நகரில் அணைகள் இடிந்து விழுந்தது தொடர்பாக எட்டு உள்ளூர் அதிகாரிகளை கைது செய்ய உத்தரவு பிறப்பித்ததாக குறிப்பிட்டுள்ளது.

இரண்டு அணைகள் இடிந்ததை அடுத்து, திடீரென்று பெருவெள்ளம் நகருக்குள் புகுந்து மொத்த மக்களையும் கடலுக்குள் அடித்துச் சென்றது.

வெள்ளத்தில் சிக்கி ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கானோர் இன்னும் காணாமல் போயுள்ளனர். முழு கட்டடங்களும் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனிடையே, சர்வதேச மீட்புக் குழுக்கள் இடிபாடுகளுக்கு அடியில் மற்றும் நகரின் துறைமுகத்தில் இருந்தும் உடல்களை மீட்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து வருகின்றனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ட அபாயமான வைரஸ் ...ான அடுத்த அழைப்பு

## ...எச்சரிக்கை

...ாடிய வைரஸ் உலகை

...ிஞ்ஞானி ஷி ஸெங்லி



...னித ...அதில் ...வ மிக ...குறிப்

...வரஸ் ...நிகழ் ...சாத்தி ...டுரை ...ட்டுள்

ளது.

மக்கள் தொகை அதிகரித்தல், அதேபோல் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள் மற்றும் பாதிப்புக்குரிய புதிய வைரஸ்களின் உருவாக்கம் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதில் அதிபயங்கரமான விடயம் யாதெனில், இது போன்ற ஆய்வுகளுக்காக, வூஹான் ஆய்வுகூடத்தில் மிகவும் மோசமான வைரஸ் இனங்கள் உருவாக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப்படுவதால் புதிய நுண்ணுயிர் திரிபுகளை உருவாக்குகிறது.

இதன் காரணமாக எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு இந்த ஆய்வுகூடத்துக்கான நிதியை நிறுத்திவைக்க வேண்டும் என்று அமெரிக்க ஒன்றிய அமைப்பு திட்டமிட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)

# தென்கொரிய ஜனாதிபதி பிரித்தானியாவுக்கு விஜயம்

(லண்டன்)


மூன்றாம் சார்ளஸ் மன்னரின் அழைப்பை ஏற்று தென்கொரிய ஜனாதிபதி எதிர்வரும் நவம்பர் மாதம் பிரித்தானியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

62 வயதுடைய, தென்கொரிய ஜனாதிபதியான யூன் சுக் அண்மையில் அமெரிக்காவுக்கான விஜயம் செய்திருந்தார்.

இதன்போது வடகொரியாவின் அணுவாயுத அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டிருந்தார்.

இந்நிலையில் பிரித்தானிய மன்னருடன் சில முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-5)

# அமெரிக்காவில் மிகப்பெரிய இரண்டாவது இந்துக் கோவில்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நியூ ஜெர்சியில் உலகின் மிகப்பெரிய இரண்டாவது இந்துக் கோவிலாக சுவாமி நாராயன் அக்ஷ்நாம் ஒக்டோபர் 8 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

இந்த கோயில் நியூயோர்க் டைம்ஸ் சதுக்கத்தில் இருந்து 60 மைல்கள் தெற்கேயும் வோஷிங்டன் நகருக்கு 180 மைல் வடக்கேயும் அமைந்துள்ளது.

183 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள இந்த கோயில் பண்டைய இந்து வேதங்களின் படி வடிவமைக்கப்பட்டு உள்ளதுடன் கோயில் முழுவதும் 10 ஆயிரம் சிலைகள் மற்றும் இந்திய இசை கருவிகள் மற்றும் நடன வடிவங்கள் செதுக்கப்பட்டு இந்திய கலாசாரத்தின் வடிவமைப்பை கொண்டுள்ளது. மேலும் 12 துணை கோயில்கள், ஒன்பது ஷிகர்கள் (கோபுரங்கள்) மற்றும் ஒன்பது பிரமிடுஷிகர்களை கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

கட்டுமானத்தில் நான்கு வகையான கற்களில் சுண்ணாம்பு, இளஞ்சிவப்பு மணற்கல், பளிங்கு மற்றும் கிரனைட் உள்ளிட்ட இரண்டு மில்லியன் கன அடி கல் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவின் புனித நதிகள் மற்றும் அமெரிக்காவின் 50 மாநிலங்கள் உட்பட உலகம் முழுவதிலுமிருந்து 300இற்கும் மேற்பட்ட நீர்நிலைகளிலிருந்து நீரைக் கொண்டுள்ளது. (நி-5)

# ...டைபெற்ற ...வந்தல்





தீபம் திலீபனின் திருவுருவப் படம் வைக்கப்பட்டிருந்தது. திலீபன் தியாக தீபமாகிய நேற்று காலை 10.48 மணிக்கு நினைவேந்தல் நடைபெற்றது. பிரான்ஸில் வாழும் தமிழ் மக்களும் பாரிஸின் லா சப்பல் பகுதியின் தமிழ் வர்த்தகர்களும் இவ் நினைவேந்தலில் கலந்து கொண்டு தீலிபனுக்கு நினைவஞ்சலி செலுத்தினார்கள். (நி-5-104)

...ாம் ...து

...க்குள் ...ிரக்க ...டறுதி ...யிரக் ...ாமல் ...களும் ...ளன. ...துழுக் ...மற் ...இருந் ...முயற் ...கின்ற (நி-5)

## சீக்கியர் படுகொலை விவகாரம்

# கனடாவின் விசாரணைகளுக்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)

கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் ஹர்தீப் சிங் நிஜார் கொலை குறித்த விசாரணைகளிற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என இந்தியாவை தனிப்பட்ட ரீதியிலும் பகிரங்கமாகவும் கேட்டுக்கொண்டதாக அமெரிக்காதெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் மத்தியு மில்லர் செய்தியாளர் மாநாட்டில் இதனை தெரிவித்துள்ளார்.

கனடாவின் குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். கனடா பிரதமர் முன் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். நாங்கள் எங்கள் கனடா சகாக்களுடன் இந்த விடயம் தொடர்பில் நெருங்கிய தொடர்பில் உள்ளோம்.

கனடாவின் விசாரணைகள் தொடர்வதும் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதும் முக்கியமான விடயம் என அமெரிக்கா கருதுகின்றது.

கனடாவின் விசாரணைகளிற்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என நாங்கள் வெளிப்படையாகவும் தனிப்பட்ட ரீதியிலும் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பேறத் துடிக்கும் மரக்கறிகள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இன்றையதினம் (27 செப்டெம்பர்) உலகசுற்றுலா தினம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடத்தினால் உலகசுற்றுலா தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த கொண்டாட்டத்தில் அறுசுவை உணவுகளினதும் கைப்பணிப் பொருட்களின் காட்சியும் இவற்றுடன் கலாசாரத் திருவிழாவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

எமது இருப்பினை தக்க வைப்பதற்கு எமது கலை கலாசாரத்துடனான சுற்றுலா மையங்களும் அவற்றின் மூலம் எமது மக்களுக்கு கிடைக்கவிருக்கும் தொழில்வாய்ப்பு மற்றும் வருமானமும் முக்கியமாக கவனிக்கத்தக்கன.

எமது பாரம்பரியத்தை பேணிப்பாதுகாக்கும் அதே வேளை அவற்றினை நாடி வரும் வெளிநாட்டு மக்களை கவர்ந்திழுத்து எமது அந்நிய நாட்டு செலாவணியை பெருக்கும் கைங்கரியம் எம்மவர்களுக்கு கிடைத்திருக்கும் வரம். நாம் எமது வளங்களை தக்கவகையில் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

எம்மவர்கள் புலம்பெயர்ந்து சென்றாலும் எமது மண்ணின் மணத்தை நுகரத் துடிக்கும் உணர்வை ஏற்படுத்த வேண்டும். புலம்பெயர்ந்தாலும் எமது தேசத்துக்கு வந்து இங்குள்ள நிகழ்வுகளில் கலந்து மகிழும் நிலைமையை உருவாக்க வேண்டும்.

மொரீசியஸ் ஒரு தீவு. விவசாய நாடாக இருந்த இத்தீவு தற்போது அனைவரும் விரும்பிச் செல்லும் சுற்றுலா நாடாக பரிணமித்திருக்கின்றது. மக்கள் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான அனைத்து உணவுவகைகள் மற்றும் காட்சிமையங்களை அனைத்து இடங்களிலும் கவரத்தக்கதாக உருவாக்கியிருக்கின்றார்கள். அனைவரின் உழைப்பும் அதில் தெரிகின்றது. தனிநபர் வருமானமும் குடும்ப வருமானமும் பெருகி மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள்.

வெளிநாட்டு உணவுகளில் எம்மவர்களுக்கிருக்கும் மோகம் தற்காலிகமானது. பாரம்பரிய உணவு தேடி மக்கள் தற்போது அலையைத் தொடங்கி விட்டனர். பாரம்பரிய உணவு தயாரிப்பு கூடங்கள் பரந்துபட்ட அளவில் உருவாவது எமது மக்களை மட்டுமன்றி வெளிநாட்டவர்களையும் சுவையில் நிச்சயமாக சுண்டியிழுக்கும். எமது பொருட்களையும் மதிப்பேற்றஞ் செய்து எமக்கேயுரித்தான பாரம்பரிய உணவுகளில் கலந்திருக்கும் அறுசுவைகளில் பரிமாறும் காலத்தை எம்மூர் வளங்களும் உற்பத்திப் பொருட்களும் எதிர்நோக்கியிருக்கின்றன.

இப்போது எங்களூர் மரக்கறிகளின் விலைகள் ஒடிமலிந்து விட்டிருக்கின்றன. மலிந்தது என்னவோ மக்களுக்கு மகிழ்ச்சிதான். நுகர்வோராக பார்த்தால் ஒரு முருங்கைக்காய் 20 ரூபாய்க்கு என சந்தையில் கூறியதும் முகம் மலர்ந்தது. கிலோ மூவாயிரம் விற்ற முருங்கைக்காய் நூறு ரூபா என்றால் அதுவும் பொருட்களின் விலைகள் எகிறியிருக்கும் நிலையில் சாத்தியமாயிருக்கிறதே. எங்களூர் உற்பத்தியின் வினைத்திறன் இது. ஆனால் இந்த விலை அடுத்த மாதம் மாறிவிடும். வருடம் முழுக்க ஏறுவதும் இறங்குவதுமாகவே இருக்கும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




உற்பத்தியாளனுக்கு கையில் எதிர்பார்த்த காசு வராது அல்லல்படும் காலம். அவர்கள் மனமுடைந்து போயிருக்கும் தருணமிது. அட மாட்டுக்கும் அதிகமாக போட முடியாதே என அங்கலாய்த்தார் விவசாய பெருமகனார்.

உள்ளூர் முருங்கையின் அளவு மாறாதிருக்க இந்திய முருங்கையினம் அளவு பெருத்து சதை வைத்து அதுவும் ருசியாகத்தான் இருக்கின்றது. முருங்கைச் செய்கையிலேயே அதீத மாற்றத்தைக் கொண்டு வந்த இந்திய முருங்கையினம் அதிகமாக பயிரிடப்படுகின்ற காரணத்தாலும் திருவிழாக்களை மையப்படுத்தி நடுகை செய்ததாலும் திடுதிப்பென உற்பத்தி அதிகரிக்க விலை எதிர்பாராத கீழ் நோக்கிய தளம்பலை சந்தித்திருக்கின்றது.

இந்த நிலைமை ஏனைய மரக்கறி வகைகளுக்கும் ஏற்படுவது வழக்கம். இதற்கு ஏற்ற தொழில்நுட்பம் இருந்தால் இவ்வாறு பழுதடையக்கூடிய மரக்கறி வகைகளை மதிப்பேற்றஞ் செய்து நீண்டகாலம் வைத்திருக்கக்கூடிய வழிவகைகளை அவசியம் உள்வாங்க வேண்டும். எமது உணவுப் பழக்கத்தை மாற்றும் கைங்கரியத்தை நாம் அறிமுகப்படுத்த இவ்வாறான உணவு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் முயற்சி செய்யலாம். பழுதடையக்கூடிய மரக்கறிப் பயிர்களை விரைந்து மதிப்பேற்றஞ் செய்து கொண்டால் அவை கிடைக்காத காலங்களிலும் அவற்றை பயன்படுத்த முடியும்.

தேசிக்காய் ஊறுகாயாவதும் பாகற்காய் வற்றலாவதும் இது போலத்தான். அதுபோல ஏனைய மரக்கறி வகைகளையும் வற்றல் போடும் கலாசாரம் எம்மவர்களிடம் இருந்தாலும் அந்த வற்றல்களை எம்மவர்கள் விரும்பி வாங்கி பயன்படுத்துவதில்லை. மரக்கறி வற்றல்களுக்கு பெரிய மவுசும் இல்லை. அவற்றின் தரம் மற்றும் மதிப்பேற்றும் பொருளிலேற்படும் மாற்றங்கள், புதியவகை உணவுப் பொருட்களின் தேவை, மக்கள் விரும்பும் சுவை இவையனைத்தும் எமது வினைத்திறனிலேயே தங்கியிருக்கின்றது. இந்த வினைத்திறனை அதிகரிக்க தகுந்த தொழில்நுட்பத்தின் உதவி அவசியம் தேவை.

இந்த நிலைமைதான் [illegible] களேன். பனம்பழத்தின் பயன்பாடு ஏதோவொரு வகையில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. பனங்களியை பல் தேவைகளுக்கு பயன்படுத்தும் தொழில்நுட்பம் என ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றினது பயன்பாடு உயரவில்லை. எங்களூர் பொருள், அதற்குரிய காலத்தில் அதிகம் கிடைக்கும் பொருள். ஆனால் அவற்றினது உச்ச பயன்பாட்டை இன்னும் உயர்த்திச் செல்ல முடியவில்லை. உள்ளூரிலிருப்பவர்கள் அதீத ஆதாயத்தை நோக்கி நகர்வதாலும் பிற தேசத்திலிருந்து வந்தவர்கள் நுகர்வோரை குறிவைத்து ஆதாயத்தை மையப்படுத்தியிருப்பதனால் உள்ளூர் பொருட்களின் மதிப்பேற்றம் பெரியளவிலானதாக இல்லை. தமிழ்க் கடவுள் அருள்பாலிக்கும் நல்லூரான், செல்வச் சந்நிதி திருவிழாவிற்கு வந்து சென்ற மக்கள் கூட்டத்திற்கு உற்பத்தியில் தளரடையாது மரக்கறிப் பயிர்கள் வந்து கொண்டேயிருந்த காரணத்தினால் அனைவருக்கும் மலிவான விலையில் கிடைக்கச் செய்திருந்தனர். இதுவும் ஒருவகையில் கடவுளுக்கான தொண்டு. ஏர் பிடித்தவன் சோர்வடையாது இருப்பதனால் தான் பயிர் உற்பத்தியும் பெருகுகின்றது.

எமது தேசத்தில் தொழில்நுட்ப பற்றாக்குறை காணப்படுவது இதற்குக் காரணம். இந்த தொழில்நுட்பங்கள் ஏனைய நாடுகளில் பிரபல்யமடைந்திருந்தாலும் எம்மவர்கள் பயன்படுத்துவது குறைவாகவே இருக்கின்றது. தொழில்நுட்பங்களை வெளிக்கொணரும் இயந்திரங்களின் விலைகள் எகிறுவதாலும் அவற்றை பயன்படுத்தும் தொழிற்சாலைகள் எண்ணிக்கை குறைவாக இருப்பதுவும் இதற்கொரு காரணம் எனக் கூறலாம். இவற்றுக்கு மாற்றுவழி காணாது விட்டால் உற்பத்தியாளனை நட்டப்பட விட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டு விடுகின்றோம்.

ஒரேநேரத்தில் அதிக மானவர்கள் ஒரே பயிரை அதிகளவில் விளைவிக்கின்ற காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டு விடுகின்றது. நுகர்வோருக்கு அதீத சந்தோசத்தை கொடுத்திருக்கும் மலிவான விலையில் மரக்கறிகள் சில சமயங்களில் விற்கப்படாமல் சந்தைகளில் தேங்கியும் இருக்கின்றன. இங்கிருக்கின்ற மரக்கறிகளின் நிலை இப்படியென்றால் தம்புள்ள சந்தைகளிலிருந்து வரும் மரக்கறிகளும் மக்கள் வாங்கக்கூடியளவில் விலைகளில் தளர்வு ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறுவரும் மரக்கறிப் பயிர்களை மதிப்பேற்றஞ் செய்து அவை கிடைக்காத காலங்களில் விலைகளை அதிகரிக்காது மக்கள் வாங்கிப் பயன்படுத்தும் வழிவகைகளை ஏற்படுத்தல் தகும்.

மக்கள் தமதுதேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பயிர்களை வளர்க்கத் தொடங்கியது எமது தேசத்தில் பசி, பட்டினி என மக்கள் அல்லல்படும் வாய்ப்புக்களைக் குறைத்திருக்கின்றது. ஆங்காங்கே மழை பெய்யத் தொடங்கியிருக்கின்றது.

தமிழ்நாட்டில் வெள்ளம். ஆனால் இங்கே பூமி காய்ந்திருக்கின்றது. மேகக் கூட்டம் வந்து பின் கலையும் நிலைமைகளை அவதானிக்க முடிகின்றது. எது எப்படியிருந்தாலும் நாம் வறண்ட தேசத்தில் வாழவில்லை என்பதைப் போல எமது தேசமும் பசுமையாயிருக்கின்றது. இந்த வளங்களை விட்டுவிட்டு எந்த வளத்தைத் தேடியோடுகின்றோம் என்பது தான் இன்னும் பலருக்கு புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுற்றுலா தினம்



பேராசிரியர் சி.சிவேசன்
நிகழ்ச்சித் தலைவர்-
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்
யாழ்.பல்கலைக்கழகம்.

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே மானிட இனத்தின் அசைவும், இயக்கமும் இனத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக இடம் பெற்றது. தேவைகள் வரையறையற்றவை. வளர்ந்து செல்பவை. இத்தகைய தேவைகளினை பூர்த்தி செய்வதற்கு பயணங்கள் தேவைப்படுகின்றது. அத்தகைய பயணங்களின் வடிவங்களும் முறைகளும் கால மாற்றம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் போன்றவற்றால் வேறுபடுகின்றன. இத்தகைய நகர்வுகள், பயணங்கள், சமகாலத்தில் நாம் வியந்து நோக்குகின்ற "சுற்றுலா" என்கின்ற முக்கியத்துவம் வாய்ந்த பாரிய தொழில்துறையின் உருவாக்கத்திற்கு அடிப்படையானது. சுற்றுலா என்கின்ற பதம் பதினோராம் நூற்றாண்டுகளிலே அதிகம் புழக்கத்திலிருந்த டொனர்ஸ் (Tornus) என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியது. "டூர்" (Tour) என்ற ஆங்கிலச் சொல்லின் கருத்து யாதெனில் ஓர் வட்டத்தின் சுழற்சியினைக் குறிப்பதாக அமைந்துள்ளது. நவீன சுற்றுலாவின் வரலாறு 17ஆம் நூற்றாண்டில் இருந்து நோக்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பியாவில் வாழ்ந்த இளம் பிரபுக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு குறிப்பாக பிரான்ஸ், கிறீஸ், இத்தாலி மற்றும் ஜேர்மன் போன்ற நாடுகளுக்கு கலை மற்றும் கலாசாரம், பாரம்பரியம், மரபுரிமை போன்றவற்றினை அறிதலின் நோக்கமாகக் கொண்டு பயணங்களினை மேற்கொண்டனர்.

அடிப்படையில் நீண்ட பயணங்களின் தோற்றமானது ஆத்மா ஈடேற்றத்துக்கான சமய அனுஷ்டானங்களிலும் வருமான ஈட்டலுக்கான வணிகத்தில் ஈடுபடும் நோக்கிலும் அமைந்தன. இவ்வாறு மானிடஇனம் சமூக.பொருளாதார ஈடேற்றத்துக்கு என பயணங்களினை மேற்கொண்டனர் என்பதற்கு வரலாற்று ரீதியாக சான்றுகள் பல உள்ளன. அதிலும் தமிழர்கள் சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே கடல்வழிப் பயணங்களில் ஈடுபட்டனர் என்பதற்கு பல்வேறு சான்றுகள் உள்ளன. "பண்டைக்கால வர்த்தகத்தின் சுருக்கமான வரலாறு" எனும் நூலில் பண்டைக்கால வணிகத்தின் வரலாறு பற்றிக் குறிப்பிடும் போது கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்திய இராச்சியமானது பாலஸ்தீனம், நுபியா போன்ற நாடுகளுடன் வணிகத்தில் ஈடுபட்டிருந்ததும் கி.பி 608ஆம் ஆண்டளவில் எகிப்தியரும் பினிசியர்களும் கடல் வழியாக கூட்டாக ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, ஸ்பெயின் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர் என்பது புலப்படுத்தப்படுகின்றது. சிறப்பாக சங்ககால இலக்கியங்களிலும், சங்ககாலத்துக்கு முற்பட்டதாக கருதப்படும் தொல்காப்பியத்திலும் இவை குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. குறிப்பாக "முந்நீர் வழக்கம்" என்று கூறப்படுவதிலிருந்து தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல் இயற்றப்படுவதற்கு முன்னே தமிழர்கள் கடல் கடந்து வாணிப நோக்கத்திற்காக பயணங்கள் மேற்கொண்டார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வெகுசன சுற்றுலா பிரபல்யமடைந்தது. காலப்போக்கில் மானிட இனத்தின் வளர்ச்சியும் நாகரீக மாறுதல்களும் சுற்றுலாத்துறைக்கான கேள்வி வடிவங்களில் மாறுதல்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக மரபுரிமைச் சுற்றுலா, பாலியல் சுற்றுலா, விவசாயச் சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, சமய சுற்றுலா-புனித யாத்திரைகள், கல்விச் சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா, இளைஞர் சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா, வியாபாரச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, கலாசாரச் சுற்றுலா என சுற்றுலாவின் வடிவங்கள் மானிடத்தின் தேவைக்கேற்ப உருவகம் பெற்றது.




## இலங்கையில் சுற்றுலாத்துறை

புத்த பகவான் போதித்த போதனைகள், தத்துவங்கள் இலங்கையின் அநாதி குடிகளிடையே பரவுவதற்கு முன்னர், வெளிநாட்டவர்கள் இலங்கையுடன் பயணத் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்பதற்கு தபசு (Thapassu) மற்றும் பல்லுகா (Balluka) என்ற இரு சகோதரர்கள் இலங்கைக்கு வணிக நோக்குடன் பயணம்மேற்கொண்டதனை வரலாற்று ஆதாரங்கள் சான்றாக்குகின்றன. எனினும் ஓர் கட்டமைக்கப்பட்ட சுற்றுலா வளர்ச்சியானது காலனித்துவ ஆட்சிக்காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

குறிப்பாக, 450 வருட காலனித்துவத்தின் பாரம்பரியமும், இலங்கையின் எழில் கொஞ்சும் இயற்கை அழகும் காலனித்துவத்திற்கு முன்னரான கட்டடக் கலைகளின் மகிமையும், சிறப்பும் மேலும் வசீகரமான காலநிலையும் நடுத்தர வருமானம் உழைக்கும் ஐரோப்பியர்களை இலங்கை நோக்கி வரவழைத்தது. உண்மையில் இன்னும் அழுத்தமாகக் கூறுவதாயின் ஐரோப்பியர்களினால் இலங்கை குளிர்கால ஒய்வுக்கான ஓர் இடமாக நோக்கப்பட்டது. 1937ஆம் ஆண்டு பிரித்தானியருடைய ஆட்சிக் காலத்தில் "சுற்றுலாப் பணியகம் " இலங்கையில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் இதன் செயற்பாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தினால். சோபையிழந்து செயலிழந்ததாகப் போயிற்று.

1960ஆம் ஆண்டு வரையில் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை ,தெங்கு, இறப்பர் போன்றவற்றில்தான் தங்கியிருந்தது. ஆனால்1960ஆம்ஆண்டிற்கு பின்னர் உலக சந்தையில் இவற்றுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக அந்நிய செலாவணியை உழைப்பதற்கான ஓர் மாற்று வழியாக சுற்றுலாத்துறையானது நோக்கப்பட்டது. அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தனியார் துறையினரும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி மீது அதீத அக்கறை செலுத்தினர். குறைந்த முதலீட்டில் கூடிய வருமானத்தினை உழைக்கக் கூடிய துறையாக சுற்றுலாத்துறை காணப்பட்டமையே காரணமாக அமைந்தது. ஆனாலும் இத்துறையானது இன்றுவரை இங்கு தொடர்ச்சியான சவால்களினை எதிர்நோக்குகிறது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் சுற்றுலாத் துறையினுடைய வளர்ச்சியானது நீண்ட காலமாக நடைபெற்ற தமிழர்களின் தாயக மீட்பு போராட்டத்தில் பாதிப்புக்குட்பட்டது. ஆனாலும் 2000 ஆண்டுகளின் முற்பகுதியில் கிழக்கில் அறுகம்பை, பாசிக்குடா பளிங்கு கடற்கரை போன்றவை சுற்றுலாப் பயணிகளால் கொண்டாடப்படும் இடங்களாக வளர்ச்சி பெற்றது. 2009 ஆண்டு, என்றும் "தீராத் தாகத்துடன்" மௌனித்த யுத்தத்தின் பின்னரும் வடக்கில் சுற்றுலா வளர்ச்சியானது 2014 ஆண்டு வரை மிகவும் மந்தகதியிலேயே காணப்பட்டது. ஆனால் கடல்கள் ஓய்வை விரும்பினாலும் காற்று கடலை ஓய விடுவதில்லை என்பது போல் முதலீட்டாளர்களும், அரச இயந்திரமும் வடக்கில் சுற்றுலா அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ண ஓட்டத்தில் அன்றும், இன்றும் பயணித்தவாறாக உள்ளன. இவற்றுக்கு அப்பால் புலம்பெயர் தேசத்தில் வாழும் புலம்பெயர் உறவுகள், புலம்பெயர் முதலீட்டாளர்கள் என்கின்ற போர்வையில் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு சுற்றுலா அபிவிருத்தி திட்டங்கள் குறித்து நீண்ட வாதங்கள் பிரதிவாதங்கள், கலந்துரையாடல்கள் மேற்கொண்ட பொழுதும் விளைவு என்னவோ சுற்றுலா அபிவிருத்தி என்பது வடக்கில் ஓர் கானல்நீராய்! உள்ளது. ஆரோக்கியமான பொதுமைப்படுத்திய அபிவிருத்தி மிக அரிதாகவே உள்ளது. சுற்றுலா என்பது 13 திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசினாலும், மாகாண நிரவாகத்தாலும் நிர்வதிக்கப்படுகின்ற துறையாக இருப்பதனால் மாகாண நிர்வாகமும் மத்திய நிரவாகமும் இசைந்து இணைந்து செயற்படுவது சற்று கடினமாக உள்ளது. இவற்றுக்கு எல்லாம் மகுடம் சூடுவது போல் தன்னார்வ நிறுவனங்களும் தங்கள் பங்கிற்கு வடக்கில் சுற்றுலா அபிவிருத்திக்கான ஐந்து ஆண்டு திட்டங்கள் தீட்டுவதுடனும், கொள்கை வகுப்பதுடனும் தங்களுடைய பங்குகளினை முடித்து கொள்ளுகின்றனர். இத்தகைய நிறுவனங்களின் நிதியீட்டத்தில் தயாரிக்கப்பட்ட திட்டங்களும், கொள்கை வண்ண அட்டைகளுடன் உயர் அதிகாரிகளின் அலுமாரிகளினை அழகுபடுத்துகின்றன.

## உலக சுற்றுலா தினம்

1980 ஆம் ஆண்டு புரட்டாதி 27இல் இருந்து உலகெங்கும் உலக சுற்றுலா தினமானது பல்வேறுபட்ட கருப்பொருள்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1970ஆம் ஆண்டு புரட்டாதி 27ஆம் திகதி உலக சுற்றுலா நிறுவனம் (United Nations World Tourism Organization) தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து 10 ஆண்டுகள் கழித்து சுற்றுலாத் தினக் கொண்டாட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. 2023 ஆண்டு உலக சுற்றுலாதினமானது "சுற்றுலாவும் பசுமை முதலீடும்" (Tourism and Green Investment) எனும் கருப்பொருளில் கொண்டாடப்படுகின்றது. பசுமை முதலீடு என்பது நிலைபேண் அபிவிருத்தியினை ஏற்படுத்துகின்ற வகையிலும், இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் சூழலுக்கு இசைந்த நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் போன்றவற்றினை அடிப்படை நோக்கமாகக் கொண்ட விடுதிகள், சுற்றுலாத் தல அபிவிருத்தி நிறுவனங்கள்,கம்பனிகள், மற்றும் திட்ட செயற்பாடுகள் என்பவற்றிற்கு நிதி வளங்களினை ஒதுக்கீடு செய்தலைக் குறித்து நிற்கின்றது.

பசுமை முதலீட்டினுடைய அடிப்படையான நோக்கம் யாதெனில் வணிகமானது சூழலுக்குப் நேர்க்கணியமான நன்மைகளை ஈட்டித் தரக்கூடிய செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் வணிகர்கள் தமக்கான வருமானத்தை ஈட்டிக்கொள்ளுதலாகும். இங்கு வருமானமானது 3இற்குப் பாதகமற்ற செயற்பாடுகள் வாயிலாக உழைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதே பசுமை முதலீட்டின் அடிப்படை நோக்கமாகும். இவ்வாறு பசுமை முதலீட்டினை ஊக்குவிக்கும் முகமாக இவ் ஆண்டு உலகெங்கிலும் சுற்றுலாத் தினமானது கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் தமிழ் பேசுகின்ற மக்களின் அடையாளமாகவும் கலங்கரை விளக்காகவும் இருந்து தமிழையும் தமிழ் மொழி சார் பண்பாட்டு. விழுமியங்களினையும் வளர்த்து வருகின்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இவ் ஆண்டு சுற்றுலாதுறையினை மிக விமர்சையாகக் கொண்டாடுகின்றது. நீண்ட கொடிய யுத்தத்தினால் வாழ்விழந்து வருமானமிழந்து, செல்லும் திசையிழந்து தவிக்கின்ற ஒரு தொகுதி தமிழ் மக்களுக்கு அறிவியல் ரீதியா தம்முடைய நிபுணத்துவத்தினை வழங்கிக் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அண்மைக்காலமாக பருவகால மாற்றம் மற்றும் அதிகரித்து வருகின்ற சூழலியல் தாக்கங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தி வருகின்றது. அந்தவகையில், இவ்வாறான சுற்றுலாத் தினமானது கொண்டாடப்படுவதன் வாயிலாக பசுமை முதலீடுகள் குறித்த விழிப்புணர்வுகளை முதலீட்டாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்திக் கொள்ள முனைகின்றது.

இதன் பொருட்டு 2023ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதிய ரங்கில் சுற்றுலாத் தினமானது வெகுவிமர்சையாக் கொண்டாடப்படவுள்ளது.

அத்தோடு புரட்டாதி இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை மாலை 4.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை வடமாகாணத்தில் காணப்படுகின்ற சிறு, நடுத்தர முயற்சியாளர்களுடைய புத்துணர்வு, புதியன புனைதல் ஆகிய திறன்களை வெளிக் கொண்டுவரும் முகமாக உணவு மற்றும் கைவினைப் பொருட்களின் சந்தையும், மேலும் தமிழன் எதை இழப்பினும் தம் பண்பாட்டு விழுமியங்களை இழக்கான் என்கின்ற அடிப்ப் டையில் தமிழர்களுடைய பண்பாட்டினைப் பிரதிநிதித்துவப். படுத்துகின்ற கலைநிகழ்வுக ளான கூத்து, சிலம்பாட்டம், கரகாட்டம் போன்ற நிகழ்வுகளும் கண்ணுக்கு விருந்தளிககவுள்ளன.

மேலும் இன்று காலை நிகழ்கின்ற ஆரம்ப நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா முதற்கொண்டு இலங்கையின் புகழ் பூத்த சுற்றுலாத்துறைப் பேராசிரியர்கள், திட்ட வகுப்பாளர்கள், தனியார் துறை நிபுணர்கள் ஆகியோர் வளவாளர்களாக கலந்து நிகழ்வினை சிறப்பிப்பார்கள்.

சுற்று லாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் நீங்களும் மகிழ்ந்து ஏனையோரையும் மகிழ்விப்ப துடன் நாட்டின் சுபீட்சத்தையும் மேம்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 293





டம் ஏதோ பிரதி உபகாரம் கேட்கப் போவதாகச் சொன்னாயே, அது என்ன?" என்றான்.

"அந்த எண்ணத்தை நான் மாற்றிக் கொண்டு விட்டேன். உன்னிடம் ஒன்றும் நான் கேட்கப் போவதில்லை. நீ நன்றி இல்லாதவன்."

அவள் அவ்விதம் குற்றம் சாட்டுவதற்குக் காரணம் உண்டு என்பதை வந்தியத்தேவன் உணர்ந்தான். மீண்டும் ஒரு தடவை அரைச்சுருளைத் தடவிப் பார்த்துக்கொண்டு ஓலை இருக்கிறது என்று உறுதி பெற்றான்.

"சமுத்திரகுமாரி! நேற்று முன் இரவில் உன்னைச் சந்தேகித்து நடந்து கொண்டதை நினைத்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது. அதற்காக என்னை மன்னித்துவிடு!"

"ஆகட்டும் நீயும் அதை மறந்துவிடு! நடக்க வேண்டியதைப் பற்றி யோசி! இலங்கையில் உன்னை நான் இறக்கிவிட்ட பிறகு என்ன செய்வாய்? இளவரசர் இருக்குமிடத்தை எப்படிக் கண்டு பிடிப்பாய்?"

"இந்தக் கடலைக் கடப்பதற்கு எனக்கு உதவி செய்த கடவுள் அதற்கும் உதவி செய்வார்!"

"கடவுளிடம் உனக்கு மிக்க நம்பிக்கை போலிருக்கிறது. நம்மைப் போன்ற அற்ப மனிதர்களின் காரியங்களில் கடவுள் சிரத்தை கொள்கிறார் என்று நினைக்கிறாயா?"

"அவ்வளவு தூரம் நான் தத்துவ விசாரணை செய்ததில்லை. ஏதாவது கஷ்டமோ, அபாயமோ நேர்ந்தால் கடவுளைப் பிரார்த்திப்பேன். கடவுளும் சமயத்தில் உதவி செய்வார். இந்தக் கடலில் எனக்குப் படகு தள்ளுவதற்காகக் கடவுள் உன்னை அனுப்பி வைத்தார் அல்லவா?"

"அவ்வளவு கர்வம் உனக்கு வேண்டாம். நான் உனக்காகப் படகு தள்ள வரவில்லை. என்னை உனக்கு உதவி செய்யும்படி கடவுள் கனவிலே சொல்லி அனுப்பவும் இல்லை"

"பின் எதற்காக நேற்று என்னைத் தப்புவித்தாய்? எதற்காக இப்போது படகு தள்ளிக்கொண்டு வருகிறாய்!"

"அதைப்பற்றி நீ கேட்க வேண்டாம். அது என் சொந்த விடயம்."

வந்தியத்தேவன் மௌன சிந்தனையில் ஆழ்ந்தான். அவனுடைய கர்வங் கொண்ட உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. தன்னுடைய வீர சௌந்தரிய வடிவழகைக் கண்டு தன் பேரில் இப்பெண் மோகங்கொண்டு விட்டாளோ என்று நினைத்தான். உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். இவளுடைய பேச்சும் நடவடிக்கைகளும் அம்மாதிரி எண்ண இடம் தரவில்லை. வேறு ஏதோ மர்மமான காரணம் இருக்கிறது. இவளுடைய வாயைப் பிடுங்கி அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஒரு விடயத்தை நினைத்தால் கொஞ்சம் எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது" என்றான்.

"அது என்ன? உனக்குக் கூடவா கவலையாயிருக்கிறது?"

"இலங்கையில் காடும் மலையும் அதிகம் என்று சொல்லுகிறார்கள்."

"இலங்கையில் பாதிக்கு மேலே காடும் மலையுந் தான்."

"காட்டு மிருகங்கள் அங்கே அதிகம் என்று சொல்கிறார்கள்" "காட்டு யானைகள் மந்தை மந்தையாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்.

(தொடரும்...)

"நாகதீவா?" என்று வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

"ஆமாம் இலங்கையின் வடபகுதி ஓரத்தில் பல தீவுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று நாகதீவு. அதில் இறங்கினால் மறுபடியும் கடலைக் கடக்கும் அவசியமில்லாமல் கரை வழியாகவே இலங்கைத் தீவை அடைந்து விடலாம்."

"என்னை இறக்கிவிட்ட பிறகு நீ என்ன செய்வாய்?"

"என்னை பற்றி உனக்கு என்ன கவலை?" என்றாள் பூங்குழலி.

"எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்தாய் அல்லவா? உன்னிடம் நான் நன்றி செலுத்த வேண்டாமா? என்னி



# சிறுவர் அரங்கம்

## நரியும் ஏமாளி சிங்கமும்



ஒரு அடர்ந்த காடு இருந்தது. அங்க மிருகங்களுக்கு ராஜாவான சிங்கம் வாழ்ந்து வந்தது. அங்க இருந்த மற்ற மிருகங்கள் சிங்கத்திற்கு பயந்து வாழ்ந்து வந்தன. சிங்கம் வெளியில் நடமாடும் பொழுது நரிகள் வெளியில் வருவதை தவிர்த்தன. சிங்கம் இல்லாத சமையங்களில் தங்களுக்கான இரையை தேடி வைத்து கொண்டன.

அதனால் சிங்கத்திற்கு இரை எளிதில் கிடைக்கவில்லை. இரையைத் தேடி சுத்தித் திரிந்தது. நீண்ட நேரமாக தனக்கான இரையை தேடிக்கிட்டு இருந்தது. இரை கிடைக்க வேயில்லை. களைப்பாக நடந்து கொண்டிருக்கும்போது ஒரு குகையை கண்டது.

உள்ளே சென்று பார்க்கும் போது யாரும் இல்லை." நிச்சயமாக இங்கே யாரோ வசித்து வருகிறார்கள். அவர்கள் வரும்வரை இங்கே இருந்தால் நிச்சயமாக பெரிய விருந்து இன்றைக்கு உண்டு" என்று சிங்கம் தனக்குத் தானே பேசிக்கொண்டு, குகையின் ராஜா போல அமர்ந்து இருந்தது. மாலை நேரமானதும் அந்த குகையில் வசித்து வந்த குள்ளநரி திரும்ப வந்து பார்க்கும்போது வெளியே சிங்கத்தின் கால்தடம் இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தது.

அது சந்தேகத்தின் பேரிலே யோசித்தது. "உண்மையில் சிங்கம் வந்து சென்றுவிட்டதா? இல்லை உள்ளே காத்துக்கொண்டு இருக்கிறதா?. இப்போது நான் உள்ளே சென்றால் தனக்குத்தானே அபாயத்தை ஏற்படுத்தியதாக இருக்கும்" என்று எண்ணியது குள்ளநரி.

ஆனால் குகைக்குள் சிங்கம் இருக்கிறதா? என்பதை கண்டுபிடிக்க புத்திசாலிதனமாக ஒரு திட்டம் போட்டது. "ஓ. குகையே" என்று பெரிய சத்தத்தில் நரி கத்தியது. இதை கேட்டு உள்ளே இருக்கும் சிங்கத்திற்கு ஒரே சந்தோசம். அப்படியே சத்தமிடாமல் பதுங்கி இருந்தது.

மீண்டும் குள்ள நரி, "ஓ குகையே நீ ஏன் இன்று மௌனமாக இருக்கிறாய்?" என்று கேட்டது. சிங்கம் குழப்பம் அடைந்தது. நரி குகையிடம் பேசுவது சிங்கத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. "ஓ குகையே உனக்கு என்ன ஆயிற்று. எல்லா நாளும் நான் திரும்பி வந்த உடனே எனக்கு வணக்கம் சொல்லுவாய். இன்று ஏன் பேசாமல் இருக்கிறாய். என்மேல் ஏதாவது கோபமா?. நான் திரும்ப செல்கிறேன்" என்று சொன்னது.

"அடக்கடவுளே! கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ? இப்போது நான் எதாவது செய்தாக வேண்டும். இல்லையென்றால் நம்முடைய இரை சென்றுவிடும்.

ஒரு வேளை நான் இருப்பதால் தான் குகை பயந்து பேசாமல் இருக்கிறதா?" என்று எண்ணியவாறு தன்னுடைய கர்ஜிக்கும் குரலால் "வணக்கம் நண்பா" என்று கூறியது.

நிம்மதி பெரு மூச்சு விட்ட குள்ள நரி, நல்ல வேளை பிழைத்தோம் என்று நினைத்து கொண்டு அங்கு இருந்து ஓட்டம் பிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே உண்மை வெற்றி பெறும்.

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சரத் வீரசேகரவை சிறையில் அடைக்க வேண்டும்

நீதிமன்றங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் விமர்சனத்துக்குரியவையன்று.

இந்தியாவில் இந்நிலைமை மாறுபட்டதாக இருப்பினும் எங்கள் நாட்டில் நீதிபரிபாலனம் தொடர்பில் விமர்சனங்கள் முழுமையாக விலக்கப்பட்டுள்ளன.

இதை மீறி நீதிமன்றங்களை – நீதிமன்றத் தீர்ப்புக்களை விமர்சிக்கும்போது, அது நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்குரியதாக கருதப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்.

தவிர, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய விசேட உரிமைகளின் கீழ் பாராளுமன்றத்தில் அவர்கள் நீதிபரிபாலனம் பற்றிச் சிலாகிக்கக்கூடிய தகைமைக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றபோதிலும் இலங்கையின் வரலாற்றில் நீதிபரிபாலனத்தை எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் விமர்சனத்துக்கு உட்படுத்தவில்லை.

அந்தளவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதிபரிபாலனத்தை பாராளுமன்றத்திலும் கௌரவப்படுத்தி வந்துள்ளனர்.

ஆனால் அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஒரு நீதிபதியை விமர்சித்து உரையாற்றி பாராளுமன்றத்துக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தியிருந்தார்.

தவிர, நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு அவர் இனவாத சாயத்தைப் பூசி ஒட்டுமொத்த நீதிபரிபாலனத்துக்கும் குந்தகம் விளைவித்து வருவது வெளிப்படை.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்து கொண்டு நீதிமன்றங்களின் தீர்ப்பை கடுமையாக விமர்சிக்கின்ற அளவில் சரத் வீரசேகர செயற்படுகிறார் எனில், அவருக்கு பின்னணியில் இருக்கக்கூடிய அதிகார பலம் பற்றி ஆராய்வது சட்டத்தின் கடமையாகிறது.

ஆம், பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மிக மோசமான இனத்துவேசி. அவரைப் பொறுத்தவரை தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்கான ஒரு சூழமைவு தேவைப்படுகிறது.

ஏலவே தமிழின அழிப்பில் பங்காற்றிய அவர் இந்த நாட்டில் மீண்டுமொரு இனக் கலவரத்தை ஏற்படுத்தி அதனூடு தமிழ் மக்களைச் சங்காரம் செய்வதற்குக் கடும் முயற்சி எடுத்து வருகிறார்.

எனினும் அவரின் குருதிப் பசிக்கு தீனி கிடைக்காதபோது நீதிமன்றங்களின் தீர்ப்பை இனவாத அடிப்படையில் சித்திரித்து அதன் மூலமாக சிங்கள மக்களைத் தூண்டி விடுகின்ற மிகமோசமான காரியத்தை அவர் செய்து வருகின்றார்.

எனினும் இதுபற்றி ஜனாதிபதியோ அன்றி அரசாங்கமோ எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் அமைதியாக இருப்பதுதான் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எதுஎவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை இனத்துவ ரீதியில் ஒப்பிட்டு விமர்சிப்பது இந்த நாட்டின் நீதிபரிபாலனத்துக்கு மிகப்பெரும் ஆபத்தாகும்.

எனவே நீதிமன்றங்களின் தீர்ப்பை விமர்சிப்பதினூடாக தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு இந்த நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தும் சதித் திட்டத்தில் இறங்கியுள்ள சரத் வீரசேகரவை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைப்பது கட்டாயமாகிறது.

## தியாகி திலீபனின் ஆத்மா ஒருபோதும் தணியாது

### சிறீதரன் எம்.பி.

(கிளிநொச்சி)

தியாகி திலீபனின் ஆத்மா ஒருபோதும் தணியாது என பாரளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக்கிளையின் ஏற்பாட்டில் நேற்றையதினம் (26) கிளிநொச்சி சேவைச் சந்தை முன்றலில் நடைபெற்ற, தியாகதீபம் திலீபனது 36வது ஆண்டுநினைவேந்தல் நிகழ்வில் நினைவுரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழவிடுதலை என்கிற இலட்சியக் கனவைச் சுமந்த போராளியாக, தனது வாழ்வை எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணித்து, தாயகப் போரின் நியாயாதிக்கத்தை சர்வதேசத்துக்குப் பறைசாற்ற வேண்டுமாயின் போரியல் அணுகுமுறையை மடைமாற்றம் செய்யவேண்டியிருந்த தேவையுணர்ந்து, காந்திய தேசத்தை நோக்கி ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் அறப்போர் நடத்தி உயிர்துறந்த தியாகதீபம் திலீபன் அவர்களது ஆத்ம தாகம் ஒருபோதும் தணியாதென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்ட வாலிபர் முன்னணியின் தலைவர் குணராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் போராளிகள், மாவீரர்களது பெற்றோர்கள், தமிழ்த்தேசிய உணர்வாளர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## புத்தளம் விமானப்படை முகாமில் வெடிப்பு

### சிப்பாய் உயிரிழப்பு

புத்தளம் - கற்பிட்டி கண்டல்குளி பகுதியில் உள்ள விமானப்படைத் தளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இளம் விமானப்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி-கண்டக்குளிபகுதியில் உள்ள இலங்கை விமானப்படை முகாமுக்கு சொந்தமான துப்பாக்கிச் சூட்டு பயிற்சி தளத்தில் துப்பாக்கி பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது குறித்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மேற்படி இளம் விமானப்படை வீரர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிடனர். (ம-7)

## பாடசாலைக்குள் கசிப்பு விற்பனை செய்த மாணவன்

(கொழும்பு)

பிரபல பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவன் பாடசாலைக்குள் கசிப்பு விற்பனை செய்து கொண்டிருந்த போது அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவரால் பிடிக்கப்பட்டதையடுத்து அவர் கலவானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மாணவனை கடுமையாக எச்சரித்து விடுவித்ததாக கலவான பொலிஸார் தெரிவித்தனர். அந்த பள்ளியில் 9ம்ஆண்டு படிக்கும் மாணவன் ஒருவரே இவ்வாறு கசிப்பு விற்றுள்ளார்.

குறித்த மாணவன் இந்த கசிப்பை தண்ணீர் போத்தலில் கொண்டு வந்து பாடசாலையில் வைத்து, கோப்பையில் ஊற்றி உயர்தர மாணவர்களுக்கு விற்பனை செய்ததாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## மனைவியைக் கொன்ற கணவனுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

எட்டு வருடங்களுக்கு முன்னர் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த கணவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை குற்றவாளி என அறிவித்த முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி நவோமி தமரா விக்ரமசேகர இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

புத்தளம் மேல் நீதிமன்றில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், முல்லேகம, நவகத்தகம, விகாரை வீதியை சேர்ந்த காமினி என்ற நபருக்கே இந்த மரண தண்டனை தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவத்தின் [illegible] 33 வயது ஆகும். கடந்த 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்துவிட்டு மாலையில் வீடு திரும்பிய துஷாரி காஞ்சனா என்ற 27வயதுடையஒருபிள்ளையின் தாயே கொலை செய்யப்பட்டுள்ளார்.

நவகத்தகம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதன்படி, சுமார் எட்டு வருடங்கள் நீடித்த நீண்ட விசாரணையின் பின்னர், குற்றவாளிக்கு மரண தண்டனையை விதித்து நீத[illegible]ர்.(ம-7)

### நவம்பர் 13 ஆம் திகதி

## 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நவம்பர் 13 ஆம் திகதி சமர்ப்பித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை நிகழ்த்தவுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21ஆம் திகதியும் அதன் பின்னர் குழுநிலை விவாதம் அல்லது மூன்றாம் வாசிப்பு நவம்பர் 22 முதல் டிசம்பர் 13 வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம-7)

## மட்டக்களப்பில் விபத்து இரு இளைஞர்கள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- கொழும்பு பிரதான வீதி சந்திவெளி கோரக்களிமடு பகுதியில் கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் கனரக வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை சுங்கான்கேணியை சேர்ந்த 22 வயதுடைய சண்முகதாஸ் அன்புதாஸ், மற்றும் கிரான் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய வடிவேல் தர்மராஜ் என்ற இருவருமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி சந்திவெளியில் சந்திவெளி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார்சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வீதி போக்குவரத்து சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த இருவரை பொலிஸார் நிறுத்துமாறு சைகை காட்டிய போதும் நிறுத்தாது அங்கிருந்து வேகமாக தப்பிச் சென்ற போது வீதியில் எதிரே வந்த கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றையவர் படுகாயமடைந்து மட்டு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## நுழைவாயில் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இளவாலை ஹென்றிஸ் கல்லூரியின் நுழைவாயில் திறப்புவிழா இன்று புதன் கிழமை காலை 10.30 மணியளவில் கல்லூரி முதல்வர் எ.மைக் மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் கல்லூரி முதல்வர் ஜே.எ. ஜேசுதாசன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக தீபம் திலீபன் நினைவுக் கிண்ணம்

# வெற்றிவாகை சூடியது ரெட்பானா நியூபாரதி

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, நடத்தப்பட்ட மாபெரும் மென் பந்து துடுப் பாட்ட போட்டித் தொடரில் ரெட்பானா நியூ பாரதி அணி வெற்றிவாகை சூடியது.

தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின் ஒரு அங்க மாக, தாயக அரசியல் துறையினரின் ஒழுங்கமைப்பில் கடந்த 15ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்ட மாபெரும் மென் பந்து துடுப்பாட்ட போட்டித் தொடரின் இறு திப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மூங் கிலாறு தேராவில் புதிய நிலா விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

குறிப்பாக தேராவில் புதியநிலா விளை யாட்டு மைதானத்தில் சிறப்பாக அலங் கரிக்கப்பட்ட மண்டபத்தில், தியாகதீபம் திலீபனின் உருவப்படத்திற்கு அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டன.



அந்தவகையில் முன்னாள் புதுக் குடியிருப்பு பிர தேச சபை உறுப்பினர் ஆறு முகம் ஜோன்சன் தலைமையில் நடை பெற்ற அஞ் சலி நிகழ்வில் பொதுச் சுடரை மூன்று மாவீரர்க ளின் தாயார் ஜோசேப் முணியம்மா ஏற்றிவைக்க, மலர் வணக் கத்தை முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆரம் பித்து வைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் சகோதரர் கள், தாயக அரசி யல்துறை செயற் பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர் கள், பொதுமக்கள் மாணவர்கள், இறு திப்போட்டிக்கு தெரி வான அணி வீரர் கள் என பலரும் மலர் வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் குறித்த போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில், ரெட்பானா நியூ பாரதி மற்றும் விஸ்வமடு தொட்டியடி விக்கி னேஸ்வரா அணிகள் மோதின. இந் நிலையில் குறித்த இறுதிப்போட்டியில் ரெட் பானா நியூபாரதிஅணிவெற்றிவாகைசூடியது.

போட்டிகளை தொடர்ந்து திலீபன் நினைவுக்கிண் ணத்தை சுவீகரித்த ரெட் பானா நியூபாரதி அணிக்கு ஐம்பதாயிரம் ரூபா பணப் பரிசு தொகையும் எதிரணி யான விஸ்வமடு தொட்டியடி விக்கினேஸ் வரா அணிக்கு முப்பதாயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கி வைக் கப்பட்டது.

அத்தோடு இந்த நினைவுக்கிண்ணத் தொட ரில் மூன்றாவது இடத்தைப் பெற்ற தருமபுரம் இளந்தாரகை அணிக்கு பதி னைந்தாயிரம் ரூபா பணப்பரி சும் வழங்கி வைக்கப்பட் டது.

தொடர்ந்து குறித்த நினைவுக் கிண் ணத் தொடரில் அதிகூடிய விக்கெட்களை வீழ்த்திய வீரராக உடையார்கட்டு நண் பர்கள் அணியின் வினுசன் தெரிவாகிய துடன், தொடரின் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரராகவும் தொடரின் நாயக னாகவும் நியூபாரதி அணியின் சுதன் அக்குத்தா தெரிவாகினார். இவர்களுக் கான வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டிருந் தமையும் குறிப்பிடத்தக் கது. (5-6-299)

---


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பெறுகை அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2023

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2023 நிதியை கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.

03. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவல கத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 15.00 மணிவரை **27.09.2023** ஆம் திகதியிலிருந்து **11.10.2023**ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

**தொலைபேசி: 021 205 8867, 021 205 8986**

05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் **27.09.2023** தொடக்கம் **11.10.2023** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பிற்பகல் **15.00** மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/= (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி ஆவணங்களினை பூரணப்படுத்தி **12.10.2023** ஆம் திகதி **15:00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட அல்லது பிந்திக்கிடைக்கும் பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வி யானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

07. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

| தொ. இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை வைப்பு (ரூபா.) | வைப்பு செல்லுபடியாகும் காலம். |
| 1 | Solar Street Light | 02 Nos | NP/14/41 (13)/3/PSDG/ Solar Street Light / 2023 | 01 மாதம் | 10,000.00 | 28/12/2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

**27.09.2023** (C-7335)



## பகிரங்க அறிவித்தல்
## ஆதன உரிமையை வெளிப்படுத்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட நாவற்காடு வரணி எனும் முகவரியில் உள்ள பின்வரும் ஆதன அட்டவணையை உடைய ஆதனமாகும்.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சி பகுதி சாவகச்சேரி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச சபை வரணி கோவில்பற்று. நாவற்காடு இறை கிராம அலுவலர் J/338 பிரிவுக்குட்பட்ட "மூன்றாம் பள்ளம் தெற்குச் சீமா" 5 பிரிவு நிலப்பரப்பு 6½ம் மேற்படி மூன்றாம் பள்ளமும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு 18¾ ம் தென்மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு 03 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 15¾ ம் தற்சமயம் இரண்டு பிரிவும் கூடிய ஒரே காணியாக உள்ளது. இதனு டன் கூடிய மொத்த நிலப்பரப்பு 22 ¼ ல் ஐந்து துண்டுகளாக நிலப்பரப்பு 15 குளி 16 நீக்கி மிகுதி தென்கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு 06 குழி 6½ இதற்கு எல்லைகள் கிழக்கு கதிர்காமர் முருகேசுவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். வடக்கு சிதம்பரநாதன் கணபதிப்பிள்ளைகளின் பிள்ளை களுக்குரிய ஆதனமாகும். மேற்கு வேலன் சிவசங்கருக் கும், தியாகராசா சத்தியசீலனுக்கும் உரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை இவ்வெல்லை நிலம் அடங்கலும் அதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்.

இவ் ஆதனத்தில் திரு.வேலன் சிந்தூரன் என்பவர் உடமைச்சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக சாவகச்சேரி பிரதேச சபையிடம் விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்தின் உரிமை தொடர்பாக உரிமை கோருபவர்கள் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் பத்திரிகையில் பிர சுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்தினுள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் உள்நாட்டில் இருப்பவர்கள் பதிவுத்தபால் மூலமாகவும், வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்கள் உரிமை தத்துவக்காரர் மூலமோ (அற்றோணிக் தத்துவகாரர்) தெரிவிக்க முடியும். இதனை எழுத்து மூலம் பதிவுத்தபாலில் அறியத்தருமாறும், அவ் வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ அல்லது உரிமை கோரவோ இல்லை எனின் திரு.வேலன் சிந்தூரன் அவர்களுக்கு சாவகச்சேரி பிரதேசசபை உடமைச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதனை அறியத்தருகின்றேன். மேலும் இவ் உடமைச்சான்றிதழ் தொடர்பாக ஏற்படக்கூடிய ஆதன உரிமை தெடர்பான எவ்விளைவுக்கும் சாவகச்சேரி பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்து கொள்கின்றேன்.

**கதிர்காமநாதன் சந்திரகுமார்**
**செயலாளர்,**
**சாவகச்சேரி பிரதேச சபை.**

(C-7334)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபனுக்கு...

தியாக தீபம் திலீபன் அவர்களது 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தியாகி திலீபன் 12 நாட்கள் நீராகாரம் கூட அருந்தாமல், இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணாவிரதம் இருந்து, செப்ரெம்பர் 26ஆம் திகதி மு.ப 10.48 மணியளவில் தமிழ் மக்களுக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்தார்.

அந்தவகையில் அவர் இவ் உலகை விட்டு நீங்கிய நேரத்திற்கு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு, சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு தியாக தீபத்தின் நினைவாக மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ம-7,33,104)

## நல்லூரில்...

ளது.

எனினும் அனைத்து தடைகளையும் தாண்டி நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. (ம-7)

## புலிகளின்...

மேற்கு பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள், தங்க நகைகள் இருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நீதிமன்ற அனுமதியை பெற்று நேற்று முன்தினம் பிற்பகல் அகழ்வுப்பணிகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த அகழ்வு பணியில் எந்தவொரு ஆயுதங்களோ, நகைகளோ மீட்கப்படாத நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் நேற்றுக் காலை 9 மணியளவில் இரண்டாவது நாளாக அகழ்வு பணி நடைபெற்றது.

கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டபோதும் நிலத்திற்குள் இருந்து தகரங்களும், ஒலிநாடா ஒன்றும் மீட்கப்பட்டிருந்தது.

மேலும் நிலத்தினை தோண்ட தோண்ட நீர்வர தொடங்கியுள்ளதால் நீரை வெளியேற்றும் பணியானது தற்போது நடைபெற்று வருகிறது. இதுவரை புதைக்கப்பட்டதாக கூறப்படும் பொருட்கள் எவையும் கிடைக்கவில்லை.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விசேட அதிரடி படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதாரப் பிரிவினர், தடயவியல் பொலிஸார் பிரசன்னத்துடன் குறித்த அகழ்வுப் பணி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## திலீபனின்...

தியாகி திலீபனின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தீவக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் - வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் நடைபெற்றன.

இதன்போது தியாக தீபம் திலீபனுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு பொதுமக்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

திலீபன் நினைவாக அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ம-7,33,104)

## ஆயுதத்தால்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

குழு முரண்பாடே இக்கொலைக்கு காரணம் என பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,100,316)

## தியாகி...

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, மூன்று மாவீரர்களின் தாயும், நாட்டு பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனை தொடர்ந்து தியாக தீபத்தின் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும், நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவண கண்காட்சி கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன் இரண்டு தூக்கு காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததுடன், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்திற்கு 06க்கும் மேற்பட்ட ஊர்திப் பவனிகள் வந்திருந்தன.

நினைவுச் சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பாக கடும் மழை பொழிய ஆரம்பித்த போதிலும், மழையையும் பொருட்படுத்தாது, நினைவிடத்தில் கூடி இருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் ஐந்தம்ச கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார்.

அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12ஆம் நாளில் அவரது உயிர் பிரிந்தது. (ம-7,33,104)

## அமைதியாக...

அலஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது பாதுகாப்புத்துறையுடன் தொடர்புடைய பரந்துபட்ட விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நிகழ் நிலைக் காப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்பன தொடர்பில் இருதரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டதாகவும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் டிரான் அலஸிடம் அன்ட்ரூ பற்ரிக் வலியுறுத்தியதாகவும் உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## திருமலையில்...

பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் திருகோணமலை துறைமுகப் பொலிஸார் தடைவிதித்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் கதிரைக்கு மலர் மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர். (ம-7)

## முல்லையிலும்...

நிம்மதியான வாழ்வுக்காய் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் வீதியில் 12 நாட்கள் நீராகாரம் ஏதுமின்றி உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்றாகும்.

இந்நிலையில் தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தக சங்க தலைவர் நவநீதன் தலைமையில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி இடம்பெற்றது

இந்நிலையில், புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. (ம-7,299)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7317)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17175)

**076 825 7716 (ஆகாஸ்)**

---

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

**பஸ் சேவை**

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு
2,900/=
வடமராட்சி - கொழும்பு
2,700/=



(17019)

**T.P: 077 544 8503**

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா வரிபாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும் (C-7337)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS

**0777-068-777**

---

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7337)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

**V2 TRAVELS - 0777-068-777**

---

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு
**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17247)

---

## பணியாளர்கள் தேவை

1. விற்பனையாளர்கள் (Licence)
2. கடை கணக்கு எழுதுனர் (PC)
3. Data Entry Work (Excel)
4. Export Import Manager

(17850)

**077 252 3155**
**075 076 6979**
(Whatsapp,Viber)

---

## தேவை

பேக்கரி வேலை தெரிந்தவர்கள்,தட்டு வேலை செய்பவர்கள்,பழக விரும்புபவர்கள்,பாண்,பிஸ்கட் லைன் ஓடக்கூடியவர்கள் (சாரதி அனுமதிப் பத்திரத்துடன்) வாகனத்துடன் தேவை.

**077 125 2257**
**077 071 5358**

(17224)

---

## CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years)
தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact : VISA Consultant,
136, Adlyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584

(17179)

---

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
**0777 554 528** (17227)

---

# கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

Green Memorial Hospital, Manipay. Estd 1848

## சத்திரசிகிச்சை பிரிவு ஆரம்பம்

### சத்திரசிகிச்சை நிபுணர்கள்

- Dr.S. மதிவாணன்
- Dr.S. கிரிதரன்

அவர்களுடன் மயக்கமருந்து நிபுணர்
Consultant Anaesthetist

- Dr.S. பிரேமகிருஷ்ணா



சத்திரசிகிச்சைப் பிரிவு ஆரம்பமானதை முன்னிட்டு முதல் 10 சத்திரசிகிச்சைகள் (minor surgery) மற்றும் அதற்கான மருத்துவ ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும்.

(C-7331)

021 225 5157
077 066 1031
greenmemorial2010@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org